திரு. சு. துரைசாமி: பேரவைத் தலைவரவர்களே, இந்த டெக்ஸ்டுல் கம்பெனியை எவ்வளவு ஆண்டுக்காலமாக மூடிவிட்டார்கள்? இந்த அரசாங்கம் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்க வேண்டுமென்பதற்காகத்தான் அதை ஏற்று நடத்துகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நீண்ட நாட்களாக அந்த நிறுவனம் சரியாக நடைபெறாமல் கொஞ்சங்கொஞ்சமாக வேலையிலிருந்து தொழிலாளர்களை அனுப்பிக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டுமென்று நல்லெண்ணத்தின் அடிப்படையில் இது திறக்கப்பட்டது.

தஞ்சாவூரிலுள்ள சைக்கிள் தொழிற்சாலை

*519 வினு—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூரில் ஏற்படுத்தப்பட்ட சைக்கிள் தொழிற்சாலை இப்போது இயங்கிக் கொண்டிருக்கின்றதா?

(இ) ஆம் எனில், அதன் உற்பத்தியளவென்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) கடந்த மூன்று ஆண்டுகளில் உற்பத்தி செய்யப்பட்ட சைக்கிள்களின் எண்ணிக்கை பின்வருமாறு—

1968-69	650.
1969-70 . . .	இல்லை.
1970-71	78.

திரு. ஆ. கு. சுப்பையா: தலைவரவர்களே, தஞ்சையிலுள்ள சைக்கிள் தொழிற்சாலை லாபத்தில் இயங்குகிறதா அல்லது நஷ்டத்தில் இயங்குகிறதா? அதனுடைய விவரத்தை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: சைக்கிள் உற்பத்தி அங்கே செய்யப்படவில்லை. சைக்கிள் ஸ்பேர் பார்ட்ஸ்களை வாங்கி அதை அசெம்பிள் செய்ய பயன்படுத்தினர்கள். இப்போதைக்கு ஏராளமாக தேக்கமிருப்பதால் சைக்கிள் அசெம்பிளிங் தொழிற்சாலைகளையெல்லாம் 'டைவர்சிபிகேஷன்' வேறுமுறை உற்பத்தியில் செல்லும்படி நாம் ஏற்பாடு செய்திருக்கிறோம். இந்த தஞ்சாவூர் நிறுவனத்தைப் பொறுத்தவரையில் பெரும்பாலும் லாபத்திலே ஓடி வருகிறது.

திரு. அ. தேவந்திரன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, இதைப் போன்ற தொழிற்சாலைகளை தஞ்சை மாவட்டத்தில் மிகவும் பின் தங்கிய பகுதிகளில் ஆரம்பிக்கின்ற எண்ணம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கனம் அங்கத்தினர் அவர்களுடைய தொகுதியில் அவர்கள் முயற்சியெடுத்துக்கொண்டால் உதவி செய்யப்படும்.

கரப்பூண்டி அருகில் சர்க்கரை ஆலை

*520 வினு—திரு. தொ. ப. சீனிவாசன்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் தொகுதி, கரப்பூண்டி கிராமம் அருகில் தனியார் துறையில் சர்க்கரை ஆலை ஒன்று துவங்க அனுமதி கேட்டு யாரேனும் மனுச் செய்தார்களா?